திரு. ஏ. ஆர். சுப்பையா : டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் மீட்டிங்கில் கூட-இது பற்றி பேசப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் அதற்கு ஆவன செய்வதாக சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அரசு அதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. மொத்தமாக 14,000 விண்ணப்பங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்றன. இப்போது இருக்கும் நிதி நிலை பொறுத்தவரை 60,000 பம்பு செட்டுகளுக்குத்தான் இணைப்பு கொடுக்க முடியும். யாருமே கொடுக்க முடியாத அளவுக்கு நாம் இப்போது மின் இணைப்பு கொடுத்து வருகிறோம். இப்போது ரூ. 14 கோடி பம்பு செட்டுக்களுக்காக செலவழித்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு மனு போட்டதற்குப் பின்னால் நில விவசாய வங்கிகள் மூலம் பம்பு செட் வாங்க கடன் பெற்று, 3, 4 ஆண்டுகள் சென்ற பிறகு கூட அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள். ஆகவே, இனிமேலாகிலும் மின்சார இணைப்பு துரிதமாக வழங்க அரசு முன் வருமா? மனு போட்ட 6 மாதத்திற்குள்ளாகவே மின் இணைப்பு வழங்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, கடனை வாங்கிக் கொண்டு, அதே சமயம் மின் இணைப்பு வேண்டுமென்று சொல்கிறார்கள். இரண்டிற்கும் 'கோ-ஆர்டினேஷன்' இருக்கவேண்டும். 5 லட்சம் விண்ணப்பங்கள் இருக்கின்றன. 5 லட்சத்திற்கும் உடனடியாக மின் இணைப்பு ஒரு ஆண்டில் கொடுத்து விட முடியாது. எவ்வளவு விரைவாக திட்டம் செய்தாலும் முடியாது. ரிட்டர்ன் 10 சதவிகிதம் தரவேண்டும். 60,000-க்கு மேல் யாருமே கொடுக்க முடியாது. மேற்கொண்டு இதை அதிகரிக்கலாமா என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம் : மின்சாரம் தருவதற்கு தடையில்லாச்சான்று வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தத் தடையில்லாச் சான்று பெறுவதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தத் தடையில்லாச் சான்று வேண்டாம் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி உத்தேசம் இல்லை.

லாரி, பஸ் போக்குவரத்து

* 58 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரவு 2 மணி முதல் காலை 4 மணி வரை லாரி, பஸ்கள் சாலைகளில் செல்லுவதை தடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், கார்களுக்கும் இத்தடை பொருந்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கிடமில்லை.

1972 சனவரி 31]

திரு. கே. எ. வகாப் : தற்போது இல்லையென்றால் எதிர்காலத்தில் வரும் என்ற பாணியில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக அந்த முறை வரவேண்டும். ஏனென்று கேட்டால் அந்த நேரத்தில் தான் டிரைவர்கள் தூங்குகிற நேரமாக இருக்கிறது. ஆகவே, அதை ஆலோசனை செய்து விரைவில் இதற்கான உத்தரவு போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த குறிப்பிட்ட நேரத்தைப் பொறுத்தவரையில் எந்த வகையான விபத்துகள் நடைபெறுகின்றன என்பதை அரசு ஆராய்ந்தது மட்டுமல்லாமல், 1 மணியிலிருந்து 4 மணி வரை நாம் சோதனை நடத்தினால் போதும், அந்தச் சோதனைகள் நடத்துவது நடைமுறையில் சாத்தியமா என்பதைப் பற்றி அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இரவு இரண்டு மணி முதல் 4 மணி வரையில் லாரி ஓட்டக்கூடாது என்று விதி போடாமல் இரண்டு டிரைவர்கள் போட்டு ஓட்ட வேண்டும் என்று உத்தரவு போடமுடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு டிரைவர்கள் லாரிகளிலே போவது அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருந்துவந்தது. ஆனால் அதிலே உள்ள சிரமங்கள் என்னவென்றால் சில பெரிய லாரி நிறுவனங்கள் ஆட்களை ஷிப்ட் முறையில் மாற்றுகிறார்கள். டி.வி.எஸ். எபி.டி. போன்ற நிறுவனங்கள் இப்படி செய்கின்றன. இந்த இரண்டு டிரைவர்கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், ஒரு டிரைவர் படுத்து தூங்குவதற்கு வசதி செய்து தரவேண்டும். அந்த வசதிகள் செய்து தருவதில் கஷ்டம் இருக்கிற காரணத்தால், அந்த உத்தரவு போடுவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இரவில் செல்லும் ஆம்னிபஸ்கள் அதி வேகமாக செல்கின்றன என்பதை அரசு அறியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆம்னிபஸ்களை பொறுத்த வரையில் கிட்டத்தட்ட இப்போது 46 பஸ்களில் அரசாங்கம் சோதனை செய்து, சோதனைகள் மூலம் கைப்பற்றி இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே அனைவரும் அறிவர். ஆம்னிபஸ்கள் இப்போது இதே நெருக்கடி நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன. இதிலே டிரைவர்களை மாற்றுவதற்கு வசதி இல்லாமல், அவர்கள் ஒரே நேரத்தில் 2 டிரைவர்களை வைத்து ஓட்ட முடியவில்லை.

தொலைதூர அரசுப் பேருந்துகளில் குளிர்சாதன வசதி

*205 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீண்டதூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் 'குளிர் சாதன வசதி' செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.